செய்தி வெளியீடு எண்: 540 நாள்: 24.07.2020

## செய்தி வெளியீடு

## மாணாக்கர்களின் கோரிக்கையை ஏற்று சான்றிதழ் பதிவேற்றம் ஆகஸ்ட் 1 –ம் தேதி முதல் ஆரம்பம்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேர்க்கைக்கு இணையதளம் மூலமாக விண்ணப்பப்பதிவு கடந்த 20–7–2020 அன்று துவங்கப்பட்டது. ஜூலை 21 –ம் தேதி வரை 1,00,620 விண்ணப்பப்பதிவுகளும், ஜூலை 22 –ம் தேதி 53,342 விண்ணப்பப்பதிவுகளும், ஜூலை 23 –ம் தேதி 34,924 விண்ணப்பப்பதிவுகளும், ஜூலை 24 –ம் தேதி, 20,351 விண்ணப்பப்பதிவுகளும் பெறப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 2,09,237 மாணாக்கர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பப்பதிவு செய்துள்ளனர். இதில், 1,27,975 மாணாக்கர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்தியுள்ளனர். மேலும், விண்ணப்பதிவிற்கு கடைசி நாள் ஜூலை 31 ஆகும்.

இந்நிலையில், இன்று முதல், அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றிழ்களை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டு மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மாணாக்கர்கள் சான்றிதழ் பதிவேற்றம் செய்ய காலஅவகாசம் கோரியுள்ளனர். எனவே, மாணாக்கர்களின கோரிக்கையை ஏற்று, சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய துவங்கப்படும் நாளான ஜூலை 25 –ம் முதல் ஆகஸ்டு 5 –ம் தேதி வரை இருந்ததற்கு பதிலாக, வருகிற ஆகஸ்ட் 1 –ம் தேதி முதல் 10 –ம் தேதி வரை மாணாக்கர்கள் www.tngasa.in என்ற இணையதளத்தில் சான்றிதழ் பதிவேற்றம் மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

**கே.பி. அன்பழகன்**
**உயர்கல்வித் துறைஅமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**